செ.வெ.எண்-32 நாள்-18.09.2020

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டங்களாகிய இலவச கறவைப் பசுக்கள் (ம) இலவச வெள்ளாடுகள் /செம்மறியாடுகள் வழங்கும் திட்டம் 2020-21-ன் கீழ், நவம்பர்-2020 முதல் சனவரி-2021 முடிய மாதங்களுக்கு கறவைப் பசுக்களும் மற்றும் நவம்பர்-2020 முதல் பிப்ரவரி-2021 முடிய மாதங்களுக்கு வெள்ளாடுகள்/செம்மறியாடுகளும் கொள்முதல் செய்து வழங்குவதற்காக, பயனாளிகளை தேர்வு செய்வது தொடர்பான சிறப்பு கிராமசபை கூட்டங்கள் நடைபெற உள்ளது.

நவம்பர்-2020 (ம) டிசம்பர்-2020 ஆகிய மாதங்களில், இலவச கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ள பெரியாத்துக்குறிச்சி, ராங்கியம், மஞ்சமேடு, மேலூர், கோவில்வாழ்க்கை (ம) திருக்களப்பூர் மற்றும் நவம்பர்-2020 (ம) டிசம்பர்-2020 ஆகிய மாதங்களில், இலவச வெள்ளாடுகள் /செம்மறியாடுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ள பொட்டவெளி, மேலப்பழூர், பெரியகிருஷ்ணாபுரம், காட்டகரம், பெரியவளையம், பிலிச்சிக்குழி, நடுவலூர், நாயகனைப்பிரியாள், பி.பி.நல்லூர், பெரியாக்குறிச்சி, புதுப்பாளையம், புங்கங்குழி, ராயம்புரம், பளிங்காநத்தம், பார்ப்பனச்சேரி, புதுக்குடி, பிள்ளைபாளையம், பிலாக்குறிச்சி, பொன்பரப்பி (ம) சன்னாசிநல்லூர் ஆகிய கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த நிலமற்ற ஏழை எளிய பெண்கள் 24.09.2020-அன்று சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சிகளில் நடைபெற உள்ள முதல் சிறப்பு கிராமசபை கூட்டத்தில் கலந்துகொண்டு மனு அளித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சனவரி-2021-ஆம் மாதத்தில், இலவச கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ள சுல்லங்குடி (ம) கோவிலூர் மற்றும் சனவரி-2021 (ம) பிப்ரவரி-2021 ஆகிய மாதங்களில் இலவச வெள்ளாடுகள்/செம்மறியாடுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ள ரெட்டிபாளையம், சென்னிவனம், பூண்டி, புதுக்கோட்டை, சிலம்பூர், ஸ்ரீராமன், பிராஞ்சேரி, பருக்கள், சாத்தம்பாடி, செந்துறை, சிறுவளூர், சீனிவாசபுரம், சன்னாவூர், சாத்தமங்களம், பிச்சனூர், சலுப்பை, த.சோழன்குறிச்சி, ஸ்ரீபுரந்தான், சுத்தமல்லி (ம) சிறுகடம்பூர் ஆகிய கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த நிலமற்ற ஏழை எளிய பெண்கள் 25.09.2020-அன்று சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சிகளில் நடைபெற உள்ள முதல் சிறப்பு கிராமசபை கூட்டத்தில் கலந்துகொண்டு மனு அளித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், மேற்படி மனுக்களை சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சி செயலாளர்களிடம், முதல் கிராம சபை நடைபெறும் நாட்களிலிருந்து ஒரு வாரம் வரை அளித்து, 24.09.2020 அன்று நடைபெறும் முதல் கிராம சபையில் கலந்துகொள்பவர்கள் 02.10.2020 அன்று நடைபெறும் இரண்டாவது கிராமசபையிலும் மற்றும் 25.09.2020 அன்று நடைபெறும் முதல் கிராம சபையில் கலந்துகொள்பவர்கள் 05.10.2020 அன்று நடைபெறும் இரண்டாவது கிராமசபை கூட்டத்திலும் கலந்துகொண்டு தகுதியான பெண் பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சி பொது மக்கள் உரிய ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**